**TNVR020020302016**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, திருவில்லிபுத்தூர்.

**முன்னிலை – செல்வி.தி.சுபாஷினி., B.Com., L.L.B (Hons)., L.L.M.,**

நீதித்துறை நடுவர் எண்.II, திருவில்லிபுத்தூர்.

2026-ஆம் ஆண்டு ஜீலை மாதம் 01-ஆம் நாள் புதன்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.241/2016**

| | | |
|---|---|---|
| குற்றமுறையிடுபவர் | | அரசுக்காக:–<br>காவல் சார்பு ஆய்வாளர்,<br>திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையம்,<br>குற்ற எண்.542/2014 |
| குற்றம்சாட்டப்பட்டவர்களின் பெயர்கள் | | 1. ரவிக்குமார், (36/14),<br>த/பெ.ராமசாமித் தேவர்,<br>மாடசாமி கோவில் தெரு,<br>இராஜபாளையம்.<br><br>2.முருகேசன், (25/14),<br>த/பெ.பாலசுப்பிரமணியன்,<br>மாடசாமி கோவில் தெரு,<br>இராஜபாளையம் (இ),<br>பிள்ளையார் கோவில் தெரு,<br>மடவார்வளாகம், திருவில்லிபுத்தூர். |
| சம்பவம் நடந்த நாள் | | 20.09.2014 |
| புகார் கொடுக்கப்பட்ட நாள் | | 20.09.2014 |
| எதிரிகள் கைதான நாள் | | 1 வது எதிரி – 20.09.2014<br>2 வது எதிரி –21.09.2014 |
| எதிரிகள் பிணையில் சென்ற நாள் | | 1 வது எதிரி – 21.10.2014<br>2 வது எதிரி – 29.01.2015 |

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு விசாரணை முடிவுற்ற நாள்<br><br>எதிரிகள் தரப்பு விசாரணை முடிவுற்ற நாள் | –<br><br>– | 01.06.2026<br><br>இல்லை |
| எதிரிகள் மீது குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | – | 22.11.2016 |
| குற்றம் | | |
| 1. சாட்டப்பட்டது | – | 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 341, 392 உ/இ 34 மற்றும் பிரிவு 3(1) உ/இ 25(1B)(a) படைக்கலச் சட்டம் 1959ன் படியும், 2வது எதிரி மீது இதச பிரிவு 341, 392 உ/இ 34 மற்றும் பிரிவு 3(1)(v) மற்றும் 25(1)(A) படைக்கலச் சட்டம் 1959–ன் |
| 2. வனையப்பட்டது | – | 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 341, 392 உ/இ 34 மற்றும் பிரிவு 3(1) உ/இ 25(1B)(a) படைக்கலச் சட்டம் 1959ன் படியும், 2வது எதிரி மீது இதச பிரிவு 341, 392 –ன் படியும் |
| காலதாமதத்திற்கான காரணம் | – | சாட்சி விசாரணைக்காக தாமதம் |

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை பற்றிய விவரங்கள் | – | அ.சா.1 01.10.2018 ம் தேதி முதல் விசாரணை மற்றும் 18.12.2018 குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.2 01.10.2018 ம் தேதி முதல் விசாரணை மற்றும் 18.12.2018 குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.3 01.10.2018 ம் தேதி முதல் விசாரணை மற்றும் 18.12.2018 குறுக்கு விசாரணை<br><br>அ.சா.4 12.11.2018 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை<br><br>அ.சா.5 12.11.2018 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை<br><br>அ.சா.6 18.12.2018 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை<br><br>அ.சா.7 11.02.2019 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.8 11.02.2019 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.9 12.10.2022 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.10 11.01.2024, 21.05.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை. |
| எதிரிகளிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | – | 05.06.2026 |
| எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச. பிரிவு 311 பிரிவின் படியான மனுக்கள் | – | Crmp.No.7638/2018 dated.12.11.2018 |
| அரசு தரப்பு வழக்கறிஞர் | – | திருமதி.P.பெத்துரதி MBA., B.L., |
| எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் | – | திரு.R.முருகன், B.A., B.L, |

| | | |
|---|---|---|
| **எதிரிகளின் கூற்று** | **–** | **எதிரிகள் குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார்கள்.** |

| | | |
|---|---|---|
| நீதிமன்றத்தின் முடிவு | – | முடிவாக, இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை குறித்து தெளிவான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து, 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 341, 392 உ/இ 34 மற்றும் பிரிவு 3(1) உ/இ 25(1B)(a) படைக்கலச் சட்டம் 1959ன் படியும், 2வது எதிரி மீது இதச பிரிவுகள் 341, 392–ன் கீழான, குற்றத்திற்கு குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, எதிரிகளை குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br><br>மேலும் இவ்வழக்கில் பி.ஆர்.எண்.339/2014–ல் உள்ள சா.பொ.1 ஆன சுமார் 1–1/2 பவுன் எடையுள்ள பட்டை மாடல் தங்க செயின் ஒன்றை அதன் உரிமையாளரான காளியப்பன் என்பவர் சி.ஆர்.எம்.பி.எண்.7941/2014 என மனு செய்து அதனை பெற்றுக்கொண்டுள்ளார். அதை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அவரே வைத்துக் கொள்ள உத்தரவிடப்படுகிறது. மேலும் பி.ஆர்.எண்.340/2014ல் உள்ள சா.பொ.2 ஆன கை துப்பாக்கி ஒன்று, சா.பொ.3ஆன பித்தளை கூம்பு வடிவ தோட்டாக்கள் (3 எண்ணம்), சா.பொ.4ஆன பித்தளை காலி தோட்டா ஒன்று ஆகியவற்றை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அரசு உடைமையாக்க உத்தரவிடப்படுகிறது. சா.பொ.5 ஆன மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி ஒன்றை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது. சா.பொ.6 ஆன TN 67 AT 6912என்ற எண் கொண்ட இருசக்கர வாகனம் காவல் நிலைய பொறுப்பில் உள்ளதால், அதன் உரிமையளார் இந்நீதிமன்றத்தில் உரிய மனு செய்து பெற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.. |

இவ்வழக்கானது 07.06.2022ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக 02.06.2026-ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 திருமதி.P.பெத்துரதி MBA., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.R.முருகன், B.A., B.L, அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்தும், ஆவணங்களை ஆராய்ந்தும், இறுதி பரிசீலனைக்குப் பின் இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.........

## தீர்ப்புரை

இவ்வழக்கு கடந்த 20.09.2014ம் தேதி காலை 09.00 மணிக்கு இவ்வழக்கின் புகார்தாரர் அவரது ஊருக்கு அருகில் உள்ள பொன்னாங்கன்னி கண்மாய்க்கு சென்று காலை கடன்களை முடித்துவிட்டு மம்சாபுரம் ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சைக்கிளில் வீட்டிற்கு வரும் போது எதிரிகள் இருவரும் TN 67 A 6912 என்ற பதிவு எண் கொண்ட சிகப்பு கலர் யமஹா இரு சக்கர வாகனத்தில் சென்று புகார்தாரரை வழிமறித்து அவரது சைக்கிளோடு நிறுத்தியும், இரு சக்கர வாகனத்தை ஓட்டி சென்ற 2வது எதிரி கத்தியை காட்டி புகார்தாரரை சட்டையை பிடித்து இழுத்தும், அவர் கழுத்தில் அணிந்திருந்த சுமார் 1 –1/2 பவுன் பட்டை மாடல் தங்க செயினை துப்பாக்கி முனையில் அச்சுறுத்தி கொள்ளையடித்துள்ளார் என்றும், புகார்தாரர் அலறி சத்தம் போட்டதும் அருகில் இருந்த சில சாட்சிகள் ஓடி வரவும், எதிரிகள் இருவரும் அவர்கள் வந்த இருச்ககர வாகனத்தில் ஏறி தப்பிச் சென்ற குற்றத்திற்காக 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 341, 392 உ/இ 34 மற்றும் பிரிவு 3(1) உ/இ 25(1B)(a) படைக்கலச் சட்டம் 1959ன் படியும், 2வது எதிரி மீது இதச பிரிவு 341, 392 உ/இ 34 மற்றும் பிரிவு 3(1)(v) மற்றும் 25(1)(A) படைக்கலச் சட்டம் 1959–ன் படி, தண்டிக்கத்தக்கவர் என்று திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, எதிரிக்கு அரசு தரப்பில் தாக்கலான ஆவணங்களின் நகல்கள் யாவும் குவிமுச பிரிவு 207-ன் படி இலவசமாக வழங்கப்பட்டு, குற்றம் குறித்து வினவியபோது பொய் வழக்கு, குற்றவாளி இல்லை என்றார். போதிய கால அவகாசத்திற்கு பிறகு 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 341, 392 உ/இ 34 மற்றும் பிரிவு 3(1) உ/இ 25(1B)(a) படைக்கலச் சட்டம் 1959 ன் படியும், 2 வது எதிரி மீது இதச பிரிவு 341, 392 –ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவியபோது எதிரிகள் பொய் வழக்கு, தாங்கள் குற்றவாளிகள் இல்லை என மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

3) அரசு தரப்பில் அசா.1 முதல் அசா.10 சாட்சிகள் விசாரணை செய்து, அ.சாஆ.1 முதல் அ.சாஆ.24 வரையிலான ஆவணங்களும் சா.பொ.1 முதல் சா.பொ.6 வரையிலான வழக்கு சொத்துக்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

<u>4) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:–</u>

4-(1) அ.சா.1 திரு.காளியப்பன் தனது சாட்சியத்தில், கடந்த 20.09.2014 ம் தேதி காலை 9 மணியளவில் பொன்னாங்கண்ணி கம்மாய் இறக்கத்தில் காலை கடன் முடித்துவிட்டு சைக்கிளில் வீட்டிற்கு போக திரும்பி வந்த போது 2 நபர்கள் கருப்பு சிவப்பு யமஹா வண்டியில் வந்தார்கள் தன் சைக்கிளை நிறுத்தினார் என்றும், பின்னால் உட்கார்ந்திருந்த நபர் துப்பாக்கியை காட்டி மிரட்டி தன் கழுத்தில் போட்டிருந்த ரூ.30,000/– மதிப்புள்ள செயினை கேட்டார் என்றும், தான் என்ன செய்வது என்று முழித்துக்கொண்டிருந்த போதே துப்பாக்கி வைத்திருந்த நபர் என் கழுத்திலிருந்த செயினை அறுத்துவிட்டார் என்றும், தன் சத்தத்தைக் கேட்டு அங்கிருந்த 2 நபர்கள் வரவும் அவர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளில் ஏறி மேற்கு பக்கமாக போய்விட்டார்கள் என்றும், அதன்பிறகு காவல்நிலையம் வந்து புகார் கொடுத்ததாகவும், மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களில் ஒருவர் 35 வயதிலிருந்து 45 வயது மதிக்கத்தக்க வயையில் சிவப்பாக இருந்தார் என்றும், மற்றொரு நபருக்கு 25 இருக்கும் என்றும், புதுநிறமாக இருப்பார் என்றும், பார்த்தால் தன்னால்

அடையாளம் காட்டமுடியும் என்று கூறிதான் புகார் கொடுத்திருந்ததாகவும், இரவு 8 மணியளவில் காவல்நிலையத்திலிருந்து போன் செய்து ஒரு நபரை பிடித்து வைத்திருப்பதாக அடையாளம் காட்டுமாறு சொன்னார்கள் என்றும், மேற்படி நபரை பார்த்து தன்னிடம் செயினை அத்த நபர்களில் ஒருவர் என்று அடையாளம் காட்டியதாகவும், ஒரு நபரை தான் போலீசார் பிடித்திருந்தார்கள் என்றும், தன்னிடம் செயினை அத்து சென்ற நபர் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை என்றும், நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து தன் செயினை பெற்றுச்சென்றதாகவும், தான் கொடுத்த புகார் தன்னிடம் காட்டப்படுவதுதான் என்றும், புகார் அ.சா.ஆ.1 என்றும், தன் செயின் புகைப்படத்தில் உள்ளது தான் என்றும், அது சா.பொ.1 என்றும், போலீசார் தன்னை விசாரித்தனர் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4-(2) அ.சா.2 திரு.குருசாமி தனது சாட்சியத்தில், அ.சா.1 யை தெரியும் என்றும், கடந்த 20.09.2014 ம் தேதி காலை 9 மணி அளவில் தானும் இராமதீர்தம் எ்னபவரும் பொன்னாங்கன்னி கம்மாய் அருகில் பேசிக்கொண்டிருந்த போது, தங்களை கடந்து ஒரு யமஹா மோட்டார் சைக்கிள் மம்சாபுரம் ரோட்டில் போனது என்றும், அந்த சமயத்தில் காளியப்பன் கம்மாய் இறக்கதிலிருந்து மம்சாபுரம் ரோட்டில் மேலே ஏறினார் என்றும், மோட்டார் சைக்கிளில் போன இருநபர்கள் காளியப்பனிடம் செயினை கேட்டு மிரட்டியுள்ளார்கள் என்றும், காளியப்பனின் செயின் ஒன்றரை பவுன் இருக்கும், மதிப்பு ரூ.30,000/- இருக்கும் என்றும், அந்த நபர்களில் ஒருவர் கையில் துப்பாக்கியும் மற்றொருவர் கையில் கத்தியும் வைத்திருந்தார் என்றும், ஒரு நபர் காளியப்பனின் கழுத்தில் இருந்த செயினை அத்துவிட்டார் என்றும், காளியப்பன் கத்தினார் என்றும், தானும் ராமதீர்த்தமும் அருகில் போனதாகவும், தாங்கள் கிட்ட போகவும் காளியப்பன் தன் செயினை அத்துவிட்டார்கள் என்று சொன்னார் என்றும், துப்பாக்கி வைத்திருந்தவர் கொன்றுவிடுவோம் என்று மிரட்டிவிட்டு மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் மேற்கு பக்கமாக போய்விட்டார்கள் என்றும், காளியப்பனிடம் விபரத்தை கேட்டு காவல்நிலையத்தில் சென்று புகார் கொடுக்குமாறு சொன்னதாகவும், மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள் தனக்கு சரியாக அடையாளம் தெரியாது என்றும், அன்றையதினமே போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்று

சாட்சியம் அளித்துள்ளார்.

4-(3) அ.சா.3 திரு.ராமர்தீர்த்தம் தனது சாட்சியத்தில், அ.சா.1, அ.சா.2 யை தனக்கு தெரியும் என்றும், 20.09.2014 ம் தேதி காலை 9 மணியளவில் தானும், கோட்டூர் குரசாமியும் பொன்னாங்கன்னி கம்மாயில் பேசிக்கொண்டிருந்ததாகவும், அந்த சமயத்தில் கருப்பு சிவப்பு யமஹா இருசக்கர வாகனம் தங்களை கடந்து சென்றது என்றும், சிறிது நேரத்தில் காளியப்பன் கத்தினார் என்றும், காளியப்பனிடம் என்னவென்று கேட்டபோது யமஹா வாகனத்தில் வந்தவர்கள் கத்தியை காட்டி செயினை அத்து விட்டு போனதாக சொன்னார் என்றும், தாங்கள் அருகில் வருவதற்குள் யமஹா வாகனத்தில் வந்தவர்கள் போய்விட்டார்கள் என்றும், இது சம்பந்தமாக காளியப்பன் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களை தூரத்தில் இருந்து பார்த்தால் தனக்கு அடையாளம் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4-(4) அ.சா.4 திரு.முனியராஜ் தனது சாட்சியத்தில், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், சுமார் 4 வருடங்களுக்கு முன்பு வேலையை முடித்துவிட்டு காலை 11.00 மணி அளவில் தானும் பாஸ்கர் என்பவரும பொன்னாங்கன்னி கண்மாய் அருகில் வந்போது போலீசார் தன்னிடம் கையெழுத்து கேட்டார்கள் என்றும், அதனால் மேற்படி கையெழுத்தை தான் போட்டுக் கொடுத்ததாகவும், பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4-(5)அ.சா.5 திரு.பாஸ்கரன் தனது சாட்சியத்தில், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், சுமார் 4 வருடங்களுக்கு முன்பு செப்டம்பர் மாதம் 20 ம் தேதி தானும் முனியராஜ் என்பவரும் காலை சுமார் 11.00 மணியளவில் பொன்னாங்கன்னி கண்மாய் அருகில் வந்தபோது போலீசார் செயின் அத்து போனது சம்பந்தமாக தங்களுக்கு தெரியுமா என்று விசாரித்தார்கள் என்றும், தெரியாது என்று சொன்னதாகவும், அப்போது போலீசார் அங்கு வரைபடம் வரைந்து தன்னிடமும், முனியராஜிடம் கையெழுத்து

கேட்டார்கள் என்றும், அதனால் மேற்படி கையெழுத்து தான் போட்டுக்கொடுத்ததாகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.3 என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4-(6)அ.சா.6 திரு.முனியாண்டி தனது சாட்சியத்தில், எதிரிகளை தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சிகளில் உள்ள முதல் கையெழுத்துக்கள் தன்னுடையது தான் என்றும், சுமார் 2 வருடங்களுக்கு தன் வாகனத்தை போலீசார் பிடித்துவிட்டது சம்பந்தமாக காவல் நிலையத்திற்கு சென்றிருந்ததாகவும், அப்போது மேற்கூறிய கையெழுத்துக்களை போட்டதாகவும், சாட்சி கையெழுத்து கேட்டதால் போட்டதாகவும், வேறு எதுவும் தனக்கு தெரியாது என்றும், ரவிக்குமாரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து அ.சா.ஆ.4 என்றும், இருசக்கர வாகனத்தை கைப்பற்றிய அத்தாட்சியில் உள்ள முதல் கையெழுத்து அ.சா.ஆ.5 என்றும், கத்தியை கைப்பற்றிய அத்தாட்சியில் உள்ள முதல் கையெழுத்து அ.சா.ஆ.7 என்றும், தன்னுடன் கையெழுத்து செய்ததாக கூறப்படும் சாட்சி முத்துச்சாமி தனது மைத்துனர் என்றும், அவர் தற்போது உயிருடன் இல்லை என்றும், தீக்குளித்து இறந்துவிட்டார் என்றும், திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு நிலுவையில் உள்ளது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4-(7)அ.சா.7 திரு.ஈஸ்வரன் தனது சாட்சியத்தில், எதிரிகளை தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதல் கையெழுத்து தன்னுடையது இல்லை என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4-(8)அ.சா.8 திரு.காளீஸ்வரன் தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் நான்கு அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையெழுத்து தன்னுயைடது தான் என்றும், மேற்படி கையெழுத்துக்களை எங்கு வைதது கையெழுத்து செய்தேன் என்று தற்போது ஞாபகமில்லை என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து அ.சா.ஆ.8 என்றும்,

அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையெழுத்துக்களின் வரிசை அ.சா.ஆ.9 முதல் அ.சா.ஆ.12 என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4-(9)அ.சா.9 திரு.பக்தவச்சலம் தனது சாட்சியத்தில், தான் தற்போது பணியிலிருந்து ஓய்வு பெற்று விட்டதாகவும், 20.9.2014 ம்தேதி 12.00 மணிக்கு காவல் நிலையத்தில் தான் பொறுப்பதிலிருந்தபோது கம்மாப்பட்டி கீழத் தெருவைச்சேர்ந்த கோவிந்தசாமி மகன் காளியப்பன் என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப்பெற்று திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலைய கு.எண்.542/2014 பிரிவு 392 இதச மற்றும் 27 (i)(a) Indian Arms Act படி வழக்கை பதிவு செய்ததாகவும், முதல் தகவல் அறிக்கை அசலை திருவில்லிபுத்தூர் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து, மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்ததாகவும், முதல் தகவல் அறிக்கை நகல் ஒன்றை திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலைய ஆய்வாளரின் பார்வைக்கு வைத்து, முதல் தகவல் அறிக்கை அசாஆ.13 என்றும், காவல் ஆய்வாளர் தன்னை இது சம்மந்தமாக விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4-(10)அ.சா.10 திரு.சுந்தரபாண்டியன் தனது சாட்சியத்தில், தான் தற்போது சிவகங்கை மாவட்டம் நெற்குப்பை காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 20.9.2014 அன்று திருவில்லிபுத்துர் நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த திரு.பக்தவச்சலம் நிலைய பொறுப்பிலிருந்த போது கம்மாபட்டி கீழத்தெருவை சேர்ந்த கோவிந்தசாமி மகன் காளியப்பன் என்பவர் நிலையம்ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அந்த புகார மனுவின் தன்மைக்கேற்ப நிலைய கு.எண்.542/2014 பிரிவுகள் 392 இதச மற்றும் பிரிவு 27 ஆயுத சட்டத்தின் படி வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் வழக்கின் புலன் விசாரணைக்காக வழக்கு கோப்புகளை தனது பார்வைக்கு சமர்பித்து அதை தான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 20.9.2014 ம்தேதி 11.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் முனியராஜ், பாஸ்கரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்ததாகவும்,

சம்பவ சாட்சிகளான கோட்டூர் குருசாமி, ராமதீர்த்தம்,. முனியராஜ், பாஸ்கரன், மற்றும் சார்பு ஆய்வாளர் பக்தவச்சலம் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமுலம் பதிவு செய்துள்ளதாகவும், பின்னர் எதிரிகளை தேடி வந்த நிலையில் 20.9.2014 ம்தேதி 15.00 மணிக்கு திருவில்லிபுத்துர் மடவார்வளாகம் பஸ் நிறுத்தம் அருகே தான் மற்றும் சார்பு ஆய்வாளர் பக்தவச்சலம் போலிஸ் பார்ட்டி சகிதம் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சிவப்பு கருப்பு கலர் கலந்த டிஎன் 67 ஏடி 6912 என்ற பதிவு எண் கொண்ட யமகா இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த ராஜபாளையத்தை சேர்ந்த ராமசாமி மகன் ரவிக்குமார் என்பவரை நிறுத்தி விசாரித்தபோது அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமுலத்தை சாட்சிகள் முனியாண்டி மற்றும் குப்புசாமி ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்ததாகவும், பின்னர் 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமுலத்தின் அடிப்படையில் 1ம் எதிரியிடமிருந்து டிஎன் 67 ஏடி 6912 என்ற பதிவெண் கொண்ட யமகா இருசக்கர வாகனத்தையும் மற்றும் மர கைப்பிடியுடன் கூடிய இரும்பு பூண் உள்ள கத்தி ஒன்றும், சுமார் 12 கிராம் எடையுள்ள பட்டை மாடல் தங்க செயின் ஒன்றையும், அத்தாட்சியின் பேரில் கைப்பற்றியதாகவும், பின்னர் 1ம் எதிரி ரவிகுமாரை கைதுக்கான காரணத்தை கூறி கைது செய்து வழக்கு சொத்துக்களுடன் நிலையம் கொண்டு வந்து பாரா வசம்ஒப்படைத்து தக்க வழிக்காவலடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி யுள்ளளதாகவும், 1ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 91 மூலம் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், பின்னர் 21.9.2014 ம்தேதி 17.00 மணிக்கு திருவில்லிபுத்துர் ஆண்டாள் தியேட்டர் சந்திப்பில் தானும் சார்பு ஆய்வாளர் பக்தவச்சலம் மற்றும் போலிஸ் பார்ட்டி சகிதம் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த வெள்ளை கலர் டிஎன் 09 ஏஎஸ். 2012 என்ற எண் கொண்ட ஹோண்டா ஆக்டிவா இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த ராஜபாளையத்தை சேர்ந்த பாலசுப்பிரமணியன் மகன் முருகேசன் என்பவரை விசாரித்ததில் அவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமுலத்தினை சாட்சிகள் ஈஸ்வரன், காளிஸ்வரன் ஆகியோர் முன்னிலையில்

பதிவு செய்ததாகவும், பின்னர் எதிரி முருகேசன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி முருகேசன் அவரது வீட்டின் மேற்கு பக்க தாழ்வாரத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கை துப்பாக்கி ஒன்றையும் பித்தனை கூம்பு வடிவ தோட்டாக்கள் மூன்றையும், காலி தோட்டா ஒன்றையும், அத்தாட்சியின் பேரில் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றியதாகவும், பின்னர் எதிரி முருகேசனிடமிருந்து டிஎன் 09 ஏஎஸ் 2012 எண் கொண்ட ஹோண்டா ஆக்டிவா இருசக்கர வாகனத்தை அத்தாட்சியின் பேரில் கைப்பற்றியதாகவும், எதிரி முருகேசனிடமிருந்து கைப்பற்றபட்ட சொத்துக்களோடு எதிரியை நிலையம் கொண்டு வந்து பாரா வசம் ஒப்படைத்து தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், எதிரி முருகேசனிடமிருந்து கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 91 மூலம் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து, பின்னர் அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட துப்பாக்கியை மாநில தடய அறிவியல் துறை சென்னை மயிலாப்பூருக்கு நீதிமன்றம் மூலம் ஆய்வறிக்கைக்கு அனுப்பப்பட்டது என்றும், அதன்படி வல்லுநர் மேற்படி துப்பாக்கியை ஆய்வு செய்து ஆய்வறிக்கை வழங்கியுள்ளார் என்றும், பின்னர் தான் பணி மாறுதலாகி வேறு காவல் நிலையம் சென்று விட்டதால் வழக்கு கோப்புகளை ஆய்வாளர் திரு.வேணுகோபால் பார்வைக்கு சமர்ப்பித்ததாகவும், அவரும் வழக்கு கோப்புகளை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகளை விசாரணை செய்ததில் சாட்சிகள் தன்னிடம் சொன்னதையே அவரிடம் சொன்னதால் தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை என்றும், இவ்வழக்கின் சாட்சிகளை விசாரணை செய்ததிலிருந்த சட்ட பிரிவுகள்.392 இதச மற்றும் பிரிவு 27 ஆயுத சட்டமாக இருந்ததை பிரிவுகள் 341, 392, 34 இதச உ/இ பிரிவு 3(1) மற்றும் பிரிவு 25(1B) (a) படைகல சட்டமாக சட்ட பிரிவுகளை மாற்றம் செய்து சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், பின்னர் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது 341, 392, 34 இதச உ/இ பிரிவு 3(1) மற்றும் பிரிவு 25(1B) (a) படைகல சட்டமாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், வரைபடம் அசாஆ.14 என்றும், எதிரி ரவிகுமார் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கபபட்ட பகுதி அசாஆ.15 என்றும், யமகா இருசக்கர வாகனத்திற்கான அத்தாட்சி அசாஆ.16

என்றும், கத்தி கைப்பற்றப்பட்ட அத்தாட்சி அசாஆ.17 என்றும், செயின் கைப்பற்றப்பட்டதற்கான அத்தாட்சி அசாஆ.18 என்றும், படிவம்91 (4 எண்ணம்) அசாஆ.19 என்றும், எதிரி முருகேசன் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ.20 என்றும், துப்பாக்கி கைப்பற்றப்பட்டதற்கான அத்தாட்சி அசாஆ.21 என்றும், மாவட்ட ஆட்சியர் அவர்களின் அனுமதி உத்தரவு அசாஆ.22 என்றும், சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ.23 என்றும், கைதுப்பாக்கி ஒன்று அ.சா.பொ,2 என்றும், தோட்டாக்கள் (3 எண்ணம்) அசாபொ.3 என்றும், காலி தோட்டா ஒன்று அ.சா.பொ.4 என்றும், மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி ஒன்று அ.சா.பொ.5 ஆகவும், டிஎன் 67 ஏடி 6912 என்ற பதிவெண் கொண்ட யமகா இரு சக்கர வாகனம் அ.சா.பொ.6 என்றும், தன்னிடம் காட்டப்படும் துப்பாக்கி மற்றும் பயன்படுத்தாத தோட்டாக்கள் 3 எண்ணம், பயன்படுத்திய தோட்டா 1 எண்ணம் தான் கைப்பற்றியதுதான் என்றும், மேற்படி துப்பாக்கி மற்றும் தோட்டாக்களை ஆய்வு செய்து தடய அறிவியல் பிரிவில் வழங்கப்பட்ட அறிக்கை அ.சா.ஆ.24 என்று சாட்சியம் அளித்துள்ளார்.

5) இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டு, எதிரிக்கு எதிராக தோன்றிய அரசு தரப்பு சாட்சிய சங்கதிகளை தொகுத்து எதிரியிடம் குவிமுச பிரிவு 313(1)(ஆ)–ன் படி வினவியபோது எதிரி சாட்சியை பொய் எனக் கூறி மறுத்தார்கள். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என சொன்னார். எ.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) <u>தீர்வுக்குரிய பிரச்சனை :–</u>

அரசு தரப்பால் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

7) கடந்த 20.09.2014 ம் தேதி காலை 09.00 மணிக்கு இவ்வழக்கின் புகார்தாரர் அவரது ஊருக்கு அருகில் உள்ள பொன்னாங்கன்னி கண்மாய்க்கு சென்று காலை கடன்களை முடித்துவிட்டு மம்சாபுரம் ரோட்டில் மேற்கிலிருந்து

கிழக்கு நோக்கி சைக்கிளில் வீட்டிற்கு வரும் போது எதிரிகள் இருவரும் TN 67 A 6912 என்ற பதிவு எண் கொண்ட சிகப்பு கலர் யமஹா இரு சக்கர வாகனத்தில் சென்று புகார்தாரரை வழிமறித்து அவரது சைக்கிளோடு நிறுத்தியும், இரு சக்கர வாகனத்தை ஓட்டி சென்ற 2 வது எதிரி கத்தியை காட்டி புகார்தாரரை சட்டையை பிடித்து இழுத்தும், அவர் கழுத்தில் அணிந்திருந்த சுமார் 1 –1/2 பவுன் பட்டை மாடல் தங்க செயினை துப்பாக்கி முனையில் அச்சுறுத்தி கொள்ளையடித்தார்கள் என்பதே அரசு தரப்பு வழக்காகும்.

8. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும்போது, அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் எவ்வித முரண்பாடுகளும் இன்றி தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், எனவே எதிரியை தண்டிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

9. எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 எதிரிகளை அடையாளம் காட்டவில்லை என்றும், பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோர் தாங்கள் கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று தெரியாது என்று ஒப்புக்கொண்டுள்ளதாகவும், இவ்வழக்கில் விக்னேஷ் என்பவர் சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றும், 1ம் எதிரியை போலீசார் சட்ட விரோதமாக கைது செய்ததாக கடந்த 19.09.2014 அன்று மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்யப்பட்டதாகவும், ஏற்கனவே குற்ற எண்.162/2014 வழக்கில் சந்தேகப்படும் நபர்களாக இவ்வழக்கின் எதிரிகளை போலீசார் கைது செய்ததாக செய்திதாளில் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும், இவ்வழக்கின் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரிகள் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும், எனவே எதிரிகளை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

10. இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 20.9.2014 அன்று பொன்னாங்கண்ணி கண்மாய் இறக்கத்தில் சைக்கிளில் வீட்டிற்கு போக திரும்பி வந்து கொண்டிருந்தபோது, இரண்டு நபர்கள் கருப்பு சிவப்பு யமஹா வண்டியில் வந்து வண்டியை ஓட்டி வந்த நபர் மிரட்டி தன் சைக்கிளை நிறுத்தியதாகவும், பின்னால் இருந்த நபர் துப்பாக்கியை காட்டி மிரட்டி தனது கழுத்தில் போட்டிருந்த ரூ.30,000/- மதிப்புள்ள செயினை கேட்டதாகவும், தான் என்ன செய்வது என்று முழித்துக் கொண்டிருந்தபோது, துப்பாக்கி வைத்திருந்த நபர் தன் கழுத்திலிருந்து செயினை அறுத்து விட்டதாகவும், தன் சத்தத்தை கேட்டு அங்கிருந்த இரண்டு நபர்கள் வரவும், இருவரும் மோட்டார் சைக்கிளில் ஏறி மேற்கு பக்கமாக போய்விட்டதாகவும், அதன் பின்பு தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், மேற்படி மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களில் ஒருவருக்கு 35 வயதிலிருந்து 45 வயது மதிக்க வகையில் சிவப்பாக இருந்ததாகவும், மற்றொரு நபருக்கு 25 வயது இருக்கும் என்றும், புது நிறமாக இருந்ததாகவும், பார்த்தால் அவர்களை தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்றும் இரவு 8.00 மணி அளவில் ஸ்ரீவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையத்தில் இருந்து போன் செய்து ஒரு நபரை பிடித்து வைத்திருப்பதாக அடையாளம் காட்டுமாறு சொன்னதாகவும், அவர்களை பார்த்து தன்னிடம் செயினை அத்த நபர்களில் ஒருவரை அடையாளம் காட்டியதாகவும் அவரது பெயர் ரவிக்குமார் என்றும், போலீசார் அடையாளம் காட்டியதாகவும் தன்னிடம் செயினை அத்து சென்ற நபர் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை என்றும் மேற்படி செயினை தன் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து பெற்றுக் கொண்டதாகவும் கூறியுள்ளார்.

11. மேலும் அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில், தான் மாலை 06.00 மணியிலிருந்து 07.00 மணிக்குள் காவல் நிலையம் சென்று இருப்பேன் என்றும், காவல் நிலையத்தில் தான் சொல்ல சொல்ல வாக்குமூலமாக எழுதி தன்னிடம் கையெழுத்து வாங்கியதாகவும், எதிரிகளை தான் பார்க்கவில்லை என்றும் தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

12. அ.சா.2 தனது சாட்சியத்தில், கடந்த 20.09.2014 அன்று காலை 9.00 மணி அளவில் தானும், இராமத்தீர்த்தம் என்பவரும் பொன்னாங்கண்ணி கண்மாய் அருகில் பேசிக் கொண்டிருந்தபோது, தங்களை கடந்து யமஹா மோட்டார் சைக்கிள் மம்சாபுரம் ரோட்டில் சென்றதாகவும், அந்த சமயத்தில் அ.சா.1 கண்மாய் இறக்கத்திலிருந்து மம்சாபுரம் ரோட்டில் மேலே ஏறியதாகவும், மோட்டார் சைக்கிளில் போன இரு நபர்கள் அ.சா.1ன் செயினை கேட்டு மிரட்டி உள்ளதாகவும், அவரது செயின் 1–1/2 பவுன் இருக்கும் என்றும், மதிப்பு ரூ.30,000/– இருக்கும் என்றும், அதில் ஒருவர் கையில் துப்பாக்கியும், மற்றொருவர் கையில் கத்தியும் வைத்திருந்ததாகவும், ஒரு நபர் அ.சா.1ன் கழுத்தில் இருந்த செயினை அற்று விட்டதாகவும், அ.சா.1 கத்தியதாகவும் தானும் இராமத்தீர்த்தமும் அருகில் சென்ற போது அ.சா.1ன் செயினை அத்துவிட்டதாக அ.சா.1 தங்களிடம் கூறியதாகவும், துப்பாக்கி வைத்திருந்தவர் கொன்று விடுவோம் என்று மிரட்டி விட்டு மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் மேற்கு பக்கமாக போய்விட்டதாகவும் அ.சா.1 டம் விபரத்தை கேட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுக்குமாறு சொன்னதாகவும் மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களின் அடையாளம் தனக்கு சரியாக தெரியாது என்றும் கூறியுள்ளார்.

13. அ.சா.3 தனது சாட்சியத்தில், அ.சா.1 மற்றும் அ.சா.2 யை தெரியும் என்றும் கடந்த 20.09.2014 அன்று காலை 9.00 மணியளவில் தானும் அ.சா.2 ம் பொன்னாங்கண்ணி கண்மாயில் பேசிக் கொண்டிருந்தபோது அந்த சமயத்தில் கருப்பு சிவப்பு யமஹா இருசக்கர வாகனம் தங்களை கடந்து சென்றதாகவும், சிறிது நேரத்தில் அ.சா.1 கத்தியதாகவும் அ.சா.1 டம் என்ன என்று கேட்டபோது யமஹா வாகனத்தில் வந்தவர்கள் கத்தியை காட்டி செயினை அறுத்துவிட்டு போனதாக சொன்னதாகவும், தாங்கள் அருகில் வருவதற்குள் யமஹா வாகனத்தில் வந்தவர்கள் போய்விட்டதாகவும், இது சம்பந்தமாக அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களை தூரத்தில் இருந்து பார்த்ததால் தனக்கு அடையாளம் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

14. பார்வை மகஜர் சாட்சியாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.4 தனது சாட்சியத்தில், சுமார் 4 வருடங்களுக்கு முன்பு வேலையை முடித்து விட்டு காலை 11.00 மணியளவில் பாஸ்கர் என்பவரும் தானும் பொன்னாங்கண்ணி கண்மாய் அருகில் வந்த போது போலீசார் தங்களிடம் கையெழுத்து கேட்டதாகவும், அதனால் தான் கையெழுத்து செய்து கொடுத்ததாகவும், பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து தன்னுடைய தான் என்றும் கூறி அரசு தரப்பிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

15. மற்றொரு பார்வை மகஜர் சாட்சியாக அரசு தரப்பில் முன்னிலைப் படுத்தப்பட்ட அ.சா.5 தனது சாட்சியத்தில், கடந்த 4 வருடங்களுக்கு முன்பு செப்டம்பர் மாதம் 20ம் தேதி தானும் அ.சா.4 ம் காலை சுமார் 11.00 மணியளவில் பொன்னாங்கண்ணி கண்மாய் அருகில் வந்த போது போலீசார் செயினை அத்து போனது சம்பந்தமாக தங்களுக்கு தெரியுமா என்று விசாரித்ததாகவும் தாங்கள் தெரியாது என்று சொன்னதாகவும் அப்போது போலீசார் அங்கு வந்து வரைபடம் வரைந்து தன்னிடமும் அ.சா.4 யிடமும் கையெழுத்து கேட்டதாகவும், அதனால் தாங்களும் கையெழுத்து போட்டுக் கொடுத்ததாகவும் கூறியுள்ளார். மேலும் தனது குறுக்கு விசாரணையில், தான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று தனக்கு முழுமையாக தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

16. அ.சா.6 தனது சாட்சியத்தில், கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு தனது வாகனத்தை போலீசார் பிடித்து விட்டது சம்பந்தமாக காவல் நிலையத்திற்கு சென்றதாகவும் அப்போது ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் கையெழுத்து செய்ததாகவும் சாட்சி கையெழுத்து கேட்டதால் போட்டுக் கொடுத்ததாகவும் வேறு எதுவும் தனக்கு தெரியாது என்றும், 1 ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்தும் இருசக்கர வாகனத்தை கைப்பற்றிய அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்தும், கத்தியை கைப்பற்றிய அத்தாட்சியில் உள்ள

முதலாவது கையெழுத்தும், தங்க செயினை கைப்பற்றிய அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்தும் தன்னுடைய தான் என்றும், தன்னுடன் கையெழுத்து செய்த முத்துசாமி என்பவர் இறந்துவிட்டதாகவும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார்.

17. அ.சா.7 தனது சாட்சியத்தில், இவ்வழக்கின் எதிரிகளை தனக்கு தெரியாது என்றும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையது இல்லை என்றும் போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

18. அ.சா.8 தனது சாட்சியத்தில், எதிரிகளை தெரியாது என்றும் தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் நான்கு அத்தாட்சிகளில் உள்ள இரண்டாவது கையெழுத்து தன்னுடைய தான் என்றும் மேற்படி கையெழுத்துக்களை தான் எங்கு வைத்து செய்து கொடுத்தார் என்று தனக்கு ஞாபகம் இல்லை என்றும் கூறி அரசு தரப்பிற்கு எதிராக பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

19. அ.சா.9 தனது சாட்சியத்தில், கடந்த 20.09.2014 அன்று 12.00 மணியளவில் காவல் நிலையத்தில் தன் பொறுப்பில் இருந்த போது, அ.சா.1 கொடுத்த புகார் மனுவை பெற்று காவல் நிலைய குற்ற எண்.542/2014 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும் அதனை சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திற்கும் உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பியதாகவும் கூறியுள்ளார்.

20. அ.சா.10 தனது சாட்சியத்தில், கடந்த 20.09.2014 அன்று அ.சா.9 பதிவு செய்து வைத்திருந்த புகார் மனுவை அன்றைய தினமே தனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தது பற்றியும், எதிரிகளை தேடி வந்த நிலையில் கடந்த 20.09.2014

அன்று 1 ம் எதிரி ஓட்டி வந்த டிஎன் 67 ஏடி 6912 என்ற பதிவெண் கொண்ட யமஹா இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த 1ம் எதிரியை நிறுத்தி விசாரித்து சாட்சிகள் முன்னிலையில் வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அவர் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் அத்தாட்சியில் மேற்படி இருசக்கர வாகனத்தையும், மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தியையும், 12 கிராம் எடையுள்ள பட்டை மாடல் தங்க செயினையும் அத்தாட்சியின் பெயரில் கைப்பற்றியதாகவும், பின்னர் 1ம் எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், பின்னர் 21.09.2014 அன்று தானும் சார்பு ஆய்வாளர் பக்தவச்சலமும் வாகன தணிக்கை செய்த போது வெள்ளை கலர் டிஎன் 09 ஏஎஸ் 2012 என்ற எண் கொண்ட ஹோண்டா ஆக்டிவா இருசக்கர வாகனத்தில் வந்த 2ம் எதிரியை விசாரித்ததில் அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து அதன் அடிப்படையில் அவரது வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கை துப்பாக்கியையும், பித்தளை கூம்பு வடிவ தோட்டாக்கள் மூன்றையும், காலி தோட்டா ஒன்றையும் அத்தாட்சியின் பெயரில் கைப்பற்றியதாகவும் பின்னர் எதிரியை நிலையம் அழைத்து வந்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும் எதிரியிடம் கைப்பற்றப்பட்ட பொருள்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும் துப்பாக்கியை மாநில தடய அறிவியல் துறைக்கு நீதிமன்றம் மூலம் அனுப்பி அறிக்கை பெற்றதாகவும், பின்னர் வழக்கு கோப்பை காவல் ஆய்வாளர் வேணுகோபால் பார்வைக்கு வைத்ததாகவும், அவரும் சாட்சிகளை விசாரித்த போது தன்னிடம் சொன்ன சங்கதிகளையே சாட்சிகள் அவரிடமும் சொன்னதால் அவர் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும், பின்னர் இவ்வழக்கின் சட்ட பிரிவுகளை மாற்றம் செய்து புலன் விசாரணை முடித்து கொண்டு எதிரிகள் மீது சட்ட பிரிவுகள் 341, 392, 34 இதச உ /இ பிரிவு 3(1) மற்றும் 25(1B)(a) படைகல சட்டத்தின் கீழ் எதிரிகள் மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்ததாக கூறியுள்ளார்.

21. மேலும் தனது குறுக்கு விசாரணையில், மேற்படி 07.09.2014 அன்று வன்னியம்பட்டி காவல் நிலையத்திற்கும் தான் தான் காவல் ஆய்வாளராக பணிபுரிந்ததாகவும், இவ்வழக்கில் விக்னேஷ்வரன் என்பவரை விசாரிக்கவில்லை என்றும், மேற்படி துப்பாக்கி எங்கு வாங்கப்பட்டது என்பது பற்றி தனது விசாரணையின் மூலம் தெரியவரவில்லை என்றும், இவ்வழக்கில் எதிரிகள் அடையாள அணிவகுப்பு நடத்தப்படவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

22. மேற்படி சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்ததிலிருந்து இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தனது முதல் விசாரணையில் 1 ம் எதிரியை தான் காவல் நிலையத்தில் வைத்து அடையாளம் காட்டியதாக கூறிவிட்டு பின்னர் தனது குறுக்கு விசாரணையில் இவ்வழக்கின் எதிரிகளை தன் பார்க்கவில்லை என்றும் தனக்கு தெரியாது என்றும் முரணாக கூறியுள்ளார். அது மட்டும் இன்றி காவல் நிலையத்தில் தான் சொல்ல சொல்ல வாக்குமூலமாக எழுதி தன்னிடம் கையெழுத்து பெற்றதாக கூறியுள்ளார். ஆனால் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள புகார் மனுவை ஆராய்கையில் அதில் உள்ள சங்கதிகள் தட்டச்சு செய்யப்பட்டு புகார்தாரர் கையெழுத்து செய்துள்ளது புலப்படுகிறது. மேற்படி சங்கதிகளிலிருந்து உண்மையில் புகார் மனுவை அ.சா.1 தான் கொடுத்தாரா என்பது குறித்தும் அதில் உள்ள சங்கதிகள் குறித்தும் நியாயமான சந்தேகத்தை இந்நீதிமன்றத்திற்கு ஏற்படுத்துகிறது. அ.சா.1 ன் சத்தம் கேட்டு சம்பவ இடத்திற்கு வந்ததாக கூறப்பட்டுள்ள சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 மேற்படி மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களை தங்களுக்கு அடையாளம் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளனர். மேலும் மேற்படி 1 ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் இவ்வழக்கு சொத்துக்களான இருசக்கர வாகனம், கத்தி, தங்க செயின் ஆகியவற்றை கைப்பற்றியதாக கூறப்படும் அத்தாட்சியிலும் சாட்சியாக கையெழுத்து செய்ததாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.6 ம் அரசு தரப்பிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அவரை அரசு தரப்பில் குறுக்கு

விசாரணை செய்த போதும் அரசு தரப்பிற்கு ஆதரவாக எந்தவித சாட்சியமும் அளிக்கவில்லை. மேலும் 2ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் சாட்சியாக கையெழுத்து செய்ததாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.7 மற்றும் அ.சா.8 சாட்சிகள் அரசு தரப்பிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளனர். மேலும் அவர்களை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போதும் அரசு தரப்பிற்கு ஆதரவாக எந்தவித சாட்சியமும் அளிக்கவில்லை அதுமட்டுமின்றி இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.10ம் தனது சாட்சியத்தில், மேற்படி துப்பாக்கியானது எங்கு வாங்கப்பட்டது என்பது பற்றி தனது விசாரணையில் தெரியவரவில்லை என்றும், இவ்வழக்கில் எதிரிகள் அடையாள அணிவகுப்பு நடத்தப்படவில்லை என்றும் ஒப்புக்கொண்டுள்ளார்.

23. மேற்படி விவரிக்கப்பட்ட காரணங்களை கருத்தில் கொண்டும், இவ்வழக்கின் சாட்சிகளே முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளதை கருத்தில் கொண்டும், புலன் விசாரணையில் உள்ள குறைபாடுகளை கருத்தில் கொண்டும், மேற்படி சாட்சிகள் யாரும் இவ்வழக்கின் எதிரிகளை இவ்வழக்குடன் சம்பந்தபடுத்தும் வகையில் சாட்சியம் அளிக்கப்படாததைக் கருத்தில் கொண்டும், 1, 2 எதிரிகள் மீதான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்வதே நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

24. முடிவாக, இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை குறித்து தெளிவான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து, 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 341, 392 உ/இ 34 மற்றும் பிரிவு 3(1) உ/இ 25(1B)(a) படைக்கலச் சட்டம் 1959ன் கீழும், 2வது எதிரி மீது இதச பிரிவுகள் 341, 392–ன் கீழான குற்றத்திற்கு

குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, எதிரிகளை குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

25. மேலும் இவ்வழக்கில் பி.ஆர்.எண்.339/2014–ல் உள்ள சா.பொ.1 ஆன சுமார் 1–1/2 பவுன் எடையுள்ள பட்டை மாடல் தங்க செயின் ஒன்றை அதன் உரிமையாளரான காளியப்பன் என்பவர் சி.ஆர்.எம்.பி.எண்.7941/2014 என மனு செய்து அதனை பெற்றுக்கொண்டுள்ளார். அதை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அவரே வைத்துக் கொள்ள உத்தரவிடப்படுகிறது. மேலும் பி.ஆர்.எண்.340/2014 ல் உள்ள சா.பொ.2 ஆன கை துப்பாக்கி ஒன்று, சா.பொ.3 ஆன பித்தளை கூம்பு வடிவ தோட்டாக்கள் (3 எண்ணம்), சா.பொ.4 ஆன பித்தளை காலி தோட்டா ஒன்று ஆகியவற்றை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அரசு உடைமையாக்க உத்தரவிடப்படுகிறது. சா.பொ.5 ஆன மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி ஒன்றை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது. சா.பொ.6 ஆன TN 67 AT 6912 என்ற எண் கொண்ட இருசக்கர வாகனம் காவல் நிலைய பொறுப்பில் உள்ளதால், அதன் உரிமையாளர் இந்நீதிமன்றத்தில் உரிய மனு செய்து பெற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

26. எதிரிகள் எழுதிக் கொடுத்த பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின்னர் ரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2026-ஆம் ஆண்டு ஜீலை மாதம் 01-ஆம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SUBASHINI T

Digitally signed by SUBASHINI T

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**

அ.சா.1 – திரு.காளியப்பன்

| | | |
|---|---|---|
| அ.சா.2 | – | திரு.குருசாமி |
| அ.சா.3 | – | திரு.ராமர்தீர்த்தம் |
| அ.சா.4 | – | திரு.முனியராஜ் |
| அ.சா.5 | – | திரு.பாஸ்கரன் |
| அ.சா.6 | – | திரு.முனியாண்டி |
| அ.சா.7 | – | திரு.ஈஸ்வரன் |
| அ.சா.8 | – | திரு.காளீஸ்வரன் |
| அ.சா.9 | – | திரு.பக்தவச்சலம் |
| அ.சா.10 | – | திரு.சுந்தரபாண்டியன் |

<u>**அரசு தரப்பு சான்றாவணங்கள்**</u>

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | – | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | – | பார்வை மகஜரில் உள்ள அ.சா.4 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.3 | – | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.4 | – | ரவிக்குமாரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.6 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.5 | – | இருசக்கர வாகனத்தை கைப்பற்றிய அத்தாட்சியில் உள்ள அ.சா.6 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.6 | – | கத்தியை கைப்பற்றிய அத்தாட்சியில் உள்ள அ.சா.6 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.7 | – | தங்க செயின் கைப்பற்றிய அத்தாட்சியில் உள்ள அ.சா.6 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.8 | – | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.8 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.9 | – | துப்பாக்கியை கைப்பற்றிய அத்தாட்சியில் உள்ள அ.சா.8 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.10 | – | பித்தளை கூம்பு வடிவ தோட்டா கைப்பற்றிய அத்தாட்சியில் உள்ள அ.சா.8 ன் கையொப்பம் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.11 | – | பித்தளை காலி தோட்ட கைப்பற்றிய அத்தாட்சியில் உள்ள அ.சா.8 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.12 | – | இருசக்கர வாகனத்தை கைப்பற்றிய அத்தாட்சியில் உள்ள அ.சா.8 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.13 | – | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.14 | – | வரைபடம் |
| அ.சா.ஆ.15 | – | ரவிக்குமார் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.16 | – | இருசக்கர வாகனத்தின் அத்தாட்சி |
| அ.சா.ஆ.17 | – | கத்தி கைப்பற்றப்பட்ட அத்தாட்சி |
| அ.சா.ஆ.18 | – | செயின் கைப்பற்றப்பட்டதற்கான அத்தாட்சி |
| அ.சா.ஆ.19 | – | படிவம் 91 ( 4 எண்ணம்) |
| அ.சா.ஆ.20 | – | எதிரி முருகேசன் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.21 | – | துப்பாக்கி கைப்பற்றப்பட்டதற்கான அத்தாட்சி |
| அ.சா.ஆ.22 | – | மாவட்ட ஆட்சியர் அவர்களின் அனுமதி உத்தரவு |
| அ.சா.ஆ.23 | – | சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை |
| அ.சா.ஆ.24 | – | தோட்டாக்களை ஆய்வு செய்து தடய அறிவியல் பிரிவில் வழங்கப்பட்ட அறிக்கை |

<u>அரசு தரப்பு சான்றுப் பொருள்</u> –

| | | |
|---|---|---|
| சா.பொ.1 | – | 1–1/2 பவுன் எடையுள்ள தங்க செயின் ஒன்று |
| சா.பொ.2 | – | கை துப்பாக்கி ஒன்று |
| சா.பொ.3 | – | பித்தளை கூம்பு வடிவ தோட்டாக்கள் (3 எண்ணம்) |
| சா.பொ.4 | – | பித்தளை காலி தோட்டா ஒன்று |
| சா.பொ.5 | – | மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி ஒன்று |
| சா.பொ.6 | – | TN 67 AT 6912 என்ற எண் கொண்ட இருச்க்கர வானம் ஒன்று |

**<u>எதிரி தரப்பு  சான்றாவணங்கள்</u>** -

எ.சா.ஆ.1 - மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் 22.09.2014 தேதியிட்ட H.C.P.(MD)No.1122 of 2014–ல் பிறப்பிக்கப்பட்ட  உத்தரவு

SUBASHINI T

Digitally signed by SUBASHINI T

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

| | |
|---|---|
| 1. | எந்த சாட்சியும் 3 முறைக்கு மேல் நிறுத்தப்படவில்லை. |
| 2. | வழக்கின் முடிவு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது. |
| 3. | நடுவர் தீர்ப்புரையின் அனைத்து பக்கங்களிலும் கையொப்பமிட்டுள்ளார். |
| 4. | இவ்வழக்கில் வழக்குச் சொத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. |
| 5. | வழக்கு விசாரணையின்போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள். |